National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 12 February 2016

# பயிற்சி அளிக்க கூட்டு முயற்சி

உள்துறைக் குழுவின் பயிலகமும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் லீ குவான் இயூ பொதுக் கொள்கை பள்ளியும் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டன.

இதன் கீழ் உள்துறைக் குழுவின் தற்போதைய, எதிர்கால தலைவர்களுக்கு பயிற்சியளிக்க இரு அமைப்புகளும் இணைந்து செயல்படும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்துறைக் குழுவின் பயிற்சி நிலையத்துக்கும் லீ குவான் இயூ பொதுக் கொள்கை பள்ளிக்கும் இடையே யோசனைகளும் அறிவாற்றலும் பகிர்ந்துகொள்ள வகை செய்கிறது என நேற்று வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.